### கொரிந்தியர் 2 7:1

இந்த வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினாலே, மிகவும் பிரியமானவர்களே, மாம்சத்திலும் மன திலும் உள்ள எவ்வித அழுக்குகளும் நீங்க நம்மைச் சுத்திகரித்து, தெய்வபயத் தை முன்னிட்டு நமது அர்ச்சிப்பின் வே லையைப் பூரணமாய் முடிக்கக்கடவோம்.

### எபிரேயருக்கு எழுதிய நிருபம் 12:14

சமஸ்தரோடும் சமாதானத்தையும் பரிசுத்ததனத்தையும் நாடுங்கள். பரிசுத் தமில்லாமல் சர்வேசுரனை ஒருவனும் தரிசிக்கமாட்டான். (உரோ. 12:18.)

### இராயப்பர் பொது நிருபம் 1 1:15-16

உங்களை அழைத்த பரிசுத்தரைப்போல், நீங்களும் உங்கள் சர்வ நடபடிக்கைகளிலும் பரிசுத்தராயிருங்கள். ஏனெனில், நாம் பரிசுத்தராயிருக்கிறபடியால், நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கின்றது. (லேவி. 11:44; 19:2; 20:7.)

### சங்கீதங்கள் 119:9

### தீமோத்தேயு 2 1:9

அவர் நம்முடைய கிரியைகளைப் பாராமல், தம்முடைய சித்தத்தையும், கிறீஸ்து சேசுவுக்குள் உலகாதிகாலத்துக்குமுன் நமக்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாதத்தையும் பார்த்து, நம்மை மீட்டிரட்சித்து, தம்முடைய பரிசுத்த அழைப்பால் நம்மை அழைத்திருக்கிறார். (தீத்து. 3:5.)

### சங்கீதங்கள் 139:23-24

### பிலிப்பியர் 2:5

கிறீஸ்து சேசுவினிடத்தில் உண்டாயிருந்த சிந்தைகளே உங்களிடத்திலும் உண்டாயிருக்கக்கடவது.

எபேசியர் 5:3

மேலும் அர்ச்சிக்கப்பட்டவர்களுக்கு யோக்கியமானபடி எவ்வித வேசித்தனமும், அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பெயர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படக்கூடாது. (கொலோ. 3:5.)

பிலிப்பியர் 2:14-16

ஆகையால் எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும், தத்தளிப் பில்லாமலும் நிறைவேற்றிவாருங்கள். (1 இரா. 4:9.) இத்தன்மையாய்க் கோணலும், மாறுபாடுள்ளதுமான ஷஜனத்தின் நடுவில் நீங்கள் குற்றமற்றவர்களாகவும், சர்வே சுரனுடைய நேர்மையான பிள்ளைக ளாகவும், மாசற்றவர்களாகவும் இருப் பீர்கள். (மத். 5:16.) ஏனெனில் நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசைப்பட்டதுமில்லையென்கிறதினாலே கிறீஸ்துவின் நாளில் எனக்கு மகிமையுண்டாயிருக்கும்படிக்கு நீங்கள் அவர்கள் நடுவிலே ஷஜீவ வாக்கியத்தைக் கையிலேந்திக்கொண்டு, உலகத்தில் சுடர்களைப் போல் பிரகாசிக்கிறீர்கள். (1 தெச. 2:19.)

உரோமாபுரியார் 1 12:1

ஆகையால் சகோதரரே, நான் கடவுளின் இரக்கத்தைக் குறித்து உங்களை மன்றாடிக் கேட்கிறதென்னவென்றால், நீங்கள் உங்கள் சரீரங்க ளைப் பரிசுத்தமும், சர்வேசுரனுக்குப் பிரியமுமான உயிருள்ள பலியாக ஒப்புக் கொடுங்கள். இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை. (பிலிப். 4:18.)

அரசராகமம் 1 2:2

ஆண்டவரைப் போலப் பரிசுத் தர் இல்லை; உம்மையன்றி வேறொரு வருமில்லை; நமது கடவுளுக்கொத்த வல்லமையுள்ளவருமில்லை.

இசாயாஸ் ஆகமம் 57:15

நித்தியத்தில் வாசஞ் செய்யும் பரிசுத்த நாமரான மகா மேன்மை தங்கிய உன்னதக் கடவுள் சொல்வ தேதெனில், தாழ்மையுடையோரின் புத்தியை உற்சாகப்படுத்தவும், பச்சாத்தாபமுடையோரின் இருதயத் தைப் பலப்படுத்தவும், நாம் உன்னத ஸ்தலத்திலே பரிசுத்த பர்வதத்திலே துயரமுந் தாழ்மையுமுள்ள இருதய ரோடு வசிக்கிறோம்.

உரோமாபுரியார் 1 16:17

அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு ஒவ் வாத பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்கள்மேல் கண்ணாயிருந்து, நீங்கள் அவர்களை விட்டு

விலகவேண்டுமென்று உங்களை மன்றாடுகிறேன். (2 தெச. 3:14; 2 அரு. 10.)

எசேக்கியேல் ஆகமம் 38:23

அதனால் அநேக சாதிகளின் கண்களுக்கு முன்பாக நமது மகிமை யும், நமது பரிசுத்ததனமும் விளங் கும்; நமக்குக் கீர்த்தியுண்டாகும்; அப்பொழுது நாம் கர்த்தரென்று அறிந்துகொள்வார்கள்.

சங்கீதங்கள் 103:1

என் ஆத்துமாவே! ஆண்ட வரை வாழ்த்துவாயாக; என் தேவனா கிய ஆண்டவரே! சொல்லுக்கு எட்டாவண்ணம் உம்முடைய மகத் துவத்தை விளக்கினீர்.

லேவியராகமம் 20:26

கர்த்தராகிய நாம் பரிசுத்த ராகையாலும், நீங்கள் நமக்கேற்ற பரிசுத்தவான்களாயிருக்க வேண்டும். நீங்கள் நமது சொந்த சனமாயிருக்கும் படியல்லோ உங்களை மற்றுமுள்ள சனங்களை விட்டுப் பிரித்தெடுத் தோம் (1 இரா. 1:16)..

எசேக்கியேல் ஆகமம் 36:23

புறச் சாதிகளின் நடுவே எமது சிறந்த நாமத்தின் பரிசுத்ததனம் பங்கப்பட்டுப் போயிற்றே; அவர்கள் மத்தியில் நீங்கள் அதனை ஈனப்படுத்தி னீர்களே; நாம் உங்கள் நடுவில் அர்ச் சிக்கப்பட்டிருக்கிறோமென்று புறச் சாதிகள் கண்டபின்னாலல்லோ அவர்கள் எம்மைக் கர்த்தரென்று அறிவார்களென்கிறார் சேனைகளின் ஆண்டவர்.

ஆமோஸ் ஆகமம் 5:14

நீங்கள் பாக்கியவான்களாய் வாழும்படி தின்மையையல்ல, நன்மை யைத் தேடுங்கள்; அப்போது சேனை களின் நாயகரான ஆண்டவர் நீங்கள் சாதிப்பதுபோல் உங்களோடிருப்பார்.

பழமொழியாகமம் 20:25

பரிசுத்தவான்களை விழுங்கு வதும், தன் பொருத்தனைகளை மக்க ளிக்கிறதும் மனிதனுக்கு நாசமேயாம்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 8:16

ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, அதை ஒரு பாத்திரத்தினால் மூடவும் மாட்டான், கட்டிலின்கீழே

வைக்கவும் மாட்டான்; ஆனால் உள்ளே வருகிறவர்கள் வெளிச்சத்தைக் காணும்படி, அதை ஒரு விளக்குத்தண்டின் மேல் வைப்பான். (மத். 5:15.)

### உரோமாபுரியார் 1 6:22

இப்பொழுதோவெனில், பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டுச் சர்வேசுரனுக்கு அடிமைகளானதினாலே, உங்களுக்குப் பலனாகப் பரிசுத்ததனமும், முடிவாக நித்திய சீவியமும் கிடைக்கின்றது.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 5:48

ஆகையால் பரமண்டலங்களிலேயிருக்கிற உங்கள் பிதா உத்தமராயிருக்கிறதுபோல நீங்களும் உத்தமராயிருங்கள்.

### சங்கீதங்கள் 68:4-5

வீணிலே என்னைப் பகைக் கிறவர்கள் என் தலைமயிர்களிலும் மிகுந்து போனார்கள்; அநியாயமாய் என்னை உபாதிக்கிற என் சத்துருக் கள் கெம்பீரங்கொண்டு திரிகிறார் கள்; நான் பறிக்காததை கொடுக்க லானேன். தேவனே! என் புத்தியீனத்தை அறிவீர்; என்னுடைய பாவங்கள் உமக்கு மறைந்திருக்கவில்லை.

### பழமொழியாகமம் 9:10

தேவ பயமே ஞானத்தின் துவக்கம்; பரிசுத்தர்களின் சாஸ்திர மாம் விமரிசை.